## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி
## O.S. No.59/2024

2025 –ம் ஆண்டு நவம்பர் மாதம் 13 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 13.11.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.எமிலிமேரி (PW–1 ) | வயது | : | 37/2025 |
| க/த பெயர் | : | திரு. சுமன் | தொழில் | : | வீட்டு குடித்தனம் |
| முகவரி | | தலையாமங்கலம் | வட்டம் | : | மன்னார்குடி |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் எங்கு குடியிருக்கிறேன் என்றால் தலையாமங்கலம், கடுக்காகாட்டில் கடந்த ஆறு வருடமாக குடியிருந்து வருகிறேன். அதற்கு முன்பு எங்கு தங்கியிருந்தேன் என்றால் தஞ்சாவூர் ஞானம் நகரில் தங்கியிருந்தேன். தாவா சொத்தின் சர்வே எண். என்னவென்றால் 200/1 விஸ்தீரணம் 61 குழி. தாவா சொத்திற்கு எந்த புறம் எனது வீடு உள்ளது என்றால் வடக்கு பகுதியில் உள்ளது. எனது வீட்டிற்கு எந்த திசையில் பிரதிவாதி குடியிருந்து வருகிறார் என்றால் தென்புறம். எனது வீட்டிக்கும் பிரதிவாதி வீட்டிற்கும் இடையில் கிழக்கு மேற்கில் உயிர் வேலி உள்ளது என்றால் சரிதான். அந்த உயிர் வேலி நான் கிரயம் வாங்குவதற்கு முன்பே இருந்தது என்றால் சரிதான்.
2) தாவா சொத்தை யாரிடமிருந்து கிரயம் வாங்கினேன் என்றால் 2021 இல் லோகநாதனிடமிருந்து கிரயம் வாங்கினேன். தாவா சொத்தானது லோகநாதனுக்கு முன்பு யாருக்கு சொந்தமானது என்றால் ராசிகாவிற்கு சொந்தமானது. ராசிகா யாரிடமிருந்து கிரயம் வாங்கினார் என்றால் பிரேமாவிடமிருந்து கிரயம் வாங்கினார். பிரேமாவிற்கு உடன் பிறந்த இரண்டு, மூன்று சகோதரிகள் உள்ளார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தானது பிரேமாவின் அப்பாவிற்கு சொந்தமான சொத்தான

இருந்தும் அவரது உயில் ஆவணத்தின் அடிப்படையில் பிரோமாவிற்கும் அவரது சகோதரிகளுக்கும் கிடைக்கப்பட்டது என்றால் சரிதான். உயிலில் குறிப்பிடாத வேறு சொத்துதான் பிரதிவாதி தங்கியுள்ள சொத்து என்றால் சரிதான்.

3) லோகநாதனுக்கு சொந்தமான சொத்தில் தான் எனக்கு உரிமையுள்ளது, மணிமேகலைக்கு சொந்தமான சொத்தில் எனக்கு உரிமை இல்லை என்றால் சரிதான்.

**பிரதிவாதியின் கற்றறிந்த வழக்கறிஞர் மேலும் சில ஆவணங்கள் குறித்து சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய கால அவகாசம் வேண்டுமென கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.11.18 10:02:22 +0530

District Munsif
Mannargudi.